ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

# ஸ்வாமி மணவாள மாமுனிகள் விஷயமாக அஷ்ட திக்கஜங்கள் அருளிச் செய்த வாழி திருநாமங்கள்

## அப்பிள்ளை அருளிச் செய்தது

இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப் பிள்ளை இணை அடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத்து அவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும் வாழியே
எப்புவியும் ஶ்ரீசைலம் ஏத்த வந்தோன் வாழியே
ஏராரும் எதிராசர் என உதித்தான் வாழியே
முப்புரி நூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே

## கோயில் கந்தாடை அண்ணன் அருளிச் செய்தது

முந்தை மறைத் தமிழ் விரிக்கும் முத்திரைக் கை வாழியே
முன்னூலும் திருமார்பும் முக்கோலும் வாழியே
உந்தி அமை திருவரையும் உடை அழகும் வாழியே
ஒரு நாளும் மறக்க ஒண்ணா ஒளி முறுவல் வாழியே
சிந்தை தனை கொண்டருளும் திருமேனி வாழியே
செழும் கருணை குடி இருக்கும் திருநயனம் வாழியே
வந்தருளி எனை எடுத்த மலர்த் தாள்கள் வாழியே
மணவாள மாமுனிவன் வாக்கின்பம் வாழியவே

## ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச் செய்தது

திணைப் பொழுதும் தனை மறவா சிந்தை தந்தான் வாழியே
சீர் திருவாய்மொழிப் பிள்ளை சேவடியோன் வாழியே
நினைப்பவர்கள் தம் பிறவி தனை நீக்குமவன் வாழியே
நீள் புவியில் தன் புகழை நிறுத்தினான் வாழியே
அனைத்தாழ்வார் கலைப் பொருளை ஆய்ந்துரைத்தோன் வாழியே
அழகாரும் எதிராசர்க்கு அன்புடையோன் வாழியே
எனைப் போலும் பாவியர்கட்க்கு இறங்குமவன் வாழியே
என் அப்பன் மணவாள மாமுனிவன் வாழியே

## அப்புள்ளார் அருளிச் செய்தது

சீராரும் செங்கமலத் திருவடிகள் வாழியே
திருமருங்கும் துவராடை இடை அழகும் வாழியே
ஏராரும் திருமார்பும் புரிநூலும் வாழியே
எப்பொழுதும் சங்காழி இலங்கு புயம் வாழியே
கார் போலும் செங்கை உறை முக்கோலும் வாழியே
கருணை குடி கொண்டருளும் கண்ணிணைகள் வாழியே
வார் காதும் திருநாமம் அணி நுதலும் வாழியே
மணவாள மாமுனிவன் வடிவழகும் வாழியே

## பொன்னடிக்கால் ஜீயர் எனப்படும் ஒன்னான வானமாமலை ஜீயர் அருளிச் செய்தது

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள்
சீர் உலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள்
மந்த மதிப் புவி மானிடர் தங்களை வானில் உயர்த்திடு நாள்
மாசறு ஞானியர் சேர் எதிராசர் தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்த மலர்ப் பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள்
காரமர் மேனி அரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடு நாள்
அந்தமில் சீர் மணவாள முனிப் பரன் அவதாரம் செய்திடு நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே

## பரவஸ்து பட்டர் பிரான் ஜீயர் அருளிச் செய்தது

சதுமறையின் உபநிடத அவையாகிய நாரணன் தாளிணை வணங்க வரு நாள்
சகல குண ஸம்பன்னர் எதிராசர் பாஷியமும் சற்குரவர் போற்ற வரு நாள்
மதி தவழும் மணிமாட மதிள் அரங்கேசனார் மாறன் உரை கேட்க வரு நாள்
வரை ஆழி புரி சங்கம் ஆரியர்கள் தோளிசைய வைத்தவர் இறைஞ்ச வரு நாள்
பதிகள் நூற்றெட்டிலும் ஸ்ரீசைல மந்திரம் பாகவதர் போற்ற வரு நாள்
பல்லாண்டு செப்பின பின் இன்னும் ஒரு நூற்றாண்டு பகருபவர் இறைஞ்ச வரு நாள்
அதி மதுரகவி எதிராசர் குருகை வண்சடகோபர் தாளிணைகள் அணியுமவர் நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே

## எறும்பியப்பா அருளிச் செய்தது

மல்லிகைகள் வகுள மலர் மணமுடியில் நாறும்
வண்பவள வாய் அலரில் மொழிகள் மணம் நாறும்
நல்லிசை சேர் பதின்மர் அருள் நற்கலைகள் எல்லாம்
நலமுடைய கருணை விழி நாடோறும் மணக்கும்
சொல்லரிய பாதம் அபிடேக மண நாறும்

தொல்லை எதிராசன் என இவ்வுலகில் வந்தோன்
செல்வ மணவாள மாமுனி லோககுரு எங்கோன்
திருவடிகள் அல்லதொரு தெய்வம் அறியேனே

**திருவேங்கட ராமானுஜ ஜீயர் அருளிச் செய்தது**

வாது செயவென்னு, சில வாதியர்கள் வந்து, தினமனமுறிய நிற்பர், ஒருபால்
வாழியனவே பெரிய, சாபமறவென்று சிலர், வந்தனைகள் செய்வர், ஒருபால்
போதும் இனி வாதம், உன பாதம் அருள் என்றனர், புகழ்ந்து நிற்பர், ஒருபால்
பொங்கி வரும் எங்கள் வினை, மங்க அருள் என்று சிலர், போற்றி செய்து நிற்பர், ஒருபால்
ஈதிவை கிடக்க, மறை நூல் தமிழ் தெரிந்தவர், ஏதமற வாழ்வர், ஒருபால்
ஏதமற வாதுலர்கள், பேதையர்கள் தாம், இறைஞ்சியே நிற்பர், ஒருபால்
மாதகையினால் உலகம் ஏழையும் அளிக்க வல்ல வந்த எதிராசன் அடி சேர்
மாமுனிவர் தீபம் அருளாள மணவாள மாமுனி, மன்னுமிடம் வாழும் வளமே

**மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்**